Oasis Grace
Engineering Projects Pvt Ltd
Build Your Future With Us
RTN.DR.R.SATHYANARAYANAN,
Director - Business Development
+91 9360136897 /
+91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in |
business@jnrgroup.org

தமிழ் குரல் மக்கள்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurali@gmil.com
RNI No.: TNTAM24840
உள்ளது உள்ளபடி

காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தொகுதி - 6 | நாளிதழ் | 10 பக்கங்கள் சென்னை, 29 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 140

காசி தமிழ் சங்கமம் 5.0-ஐ குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தொடங்கி வைத்தார்



சென்னை – 29 நவம்பர், 2026 உத்தரப் பிரதேச மாநிலம் வாரணாசியில், காசி தமிழ் சங்கமத்தின் ஐந்தாவது நிகழ்வை குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் இன்று (28.11.2026) தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மத்திய கல்வி அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி, உத்தரப் பிரதேச முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில், 10 வெளிநாட்டு மொழிகள் உட்பட 50 மொழிகளில் திருக்குறள் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டது.

நிகழ்ச்சியில் உரையாற்றிய குடியரசுத் துணைத்தலைவர், காசிக்கும் தமிழ்நாட்டுக்கும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் பழமையான நாகரிகம், பண்பாடு, ஆன்மிகத் தொடர்பு இருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டு காசி தமிழ் சங்கமத்தின் கருப்பொருளாக, 'திருக்குறள் பயில்வோம்' என்பது அமைந்துள்ளது எனவும், குறிப்பாக மாணவர்கள், இளைஞர்களிடம் திருக்குறளின் காலத்தால் அழியாத அறிவுரைகளையும் அறநெறிகளையும் கொண்டு சேர்ப்பதே இதன் நோக்கம் என்றும் அவர் தெரிவித்தார்.

திருக்குறள் என்பது அனைவருக்கும் பொதுவான வாழ்க்கை வழிகாட்டி என்று அவர் குறிப்பிட்டார்.

சமத்துவம், மனிதநேயம், நேர்மை ஆகிய உயர்ந்த கருத்துகளைத் திருக்குறள் எடுத்துரைக்கிறது என்று அவர் கூறினார்.

இக்கருத்துகள் மொழி, மாநிலம், நாடு ஆகிய எல்லைகளைக் கடந்தவை என்றும் அவர் தெரிவித்தார்.

திருக்குறளின் கருத்துகளைப் படித்து, அவற்றை அன்றாட வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.